Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

EELA NADU

போன்: 320 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

யாழ்ப்பாணம் மார்கழி 12-ம் நாள் ஷஃபான் பிறை 21 26-12 சனிக்கிழமை 317



30 வருட கறசேவையினுல் மக்களின்
அமோக ஆதரவை பெற்றவர்
எம். எஸ். எம். ஜுனைட்
( மூக்குக்கண்ணுடி தயாரிப்பாளர் )
144, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்

# மீனவர் சடலங்கள் இன்று இங்கு வரும்

## அடையாளம் கண்டு அவற்றை கொண்டுவர கோஷ்டி சென்றது

### பிரேத அடக்கத்துக்கு ரூ. 100 அரசங்க உதவி

யாழ்ப்பாணம், சனி

சூருவளியில் சிக்கி காணுமல் போன சுமார் இருநூறு மீனவர்களும் தென்னிந்திய கரையோரப் பகுதியான இராமேஸ்வரத்துக்கருகில் மாண்டு விட்டதாக நம்பப்படுகிறது. மாண்டவர்களே அடையாளம் கண்டு இங்கு கொண்டு வருவதற்காக முன்னுள் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினமும் மற்றும் சிலரும் கடற்படையைச் சேர்ந்த மோட்டார் இயந்திரப்படகில் நேற்று முற்பகல் தனுஷ்கோடிக்குப் புறப்பட்டுச் சென்றனர். இன்று அதிகாலை அவர்கள் திரும்பிவந்து சேர்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

### அடக்கத்துக்கு அரசாங்க உதவி

சூருவளியில் சிக்கி மாண்டு போனவர்களின் பிரேத அடக்கச் செலவுக்கு தலா நூறு ரூபாய் வீதம் வழங்குவதென நேற்றுக்காலை யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு பெருமையினுர், காரியாலய உதவியாளர், உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. சிவப்பிரகாசம், சமூகசேவை இலாகா உதவிடைரக்டர் திரு. பாலசுப்பிரமணியம், முன்னுள் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், யாழ்ப்பாணம் மாநகரசபை அங்கத்தவர்கள் திரு. ஏ ஜி. இராஜசூரியர், திரு. எம். எஸ். பேரின்பநாயகம் ஆகியோர் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டனர். புயலினுல் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு உடனடியாக இலவச உணவு முதலியன வழங்கி நிவாரணமளிப்பதெனவும் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

### கடற்கரையில் கதறி அழுகின்றனர்

வழக்கம்போல் அன்றும் மனைவியிடமும், பிள்ளைகளிடமும், பெற்ருேர்களிடமும் சொல்லிக்கொண்டு தொழிலுக்குப் புறப்பட்ட அவர்கள் திரும்பி வராததைக் கண்டு அச்சமடைந்திருந்த உறவினர்களுக்கு தனுஷ்கோடிக் கடற்கரையில் சடலங்கள் மிதப்பதாகச் செய்தி கிடைத்ததும் வீட்டிலும் வீதியிலும் கடற்கரையிலும் கூடிக்கூடி நின்று கதறிக் கதறியழுதனர். இறந்தவர்கள் தங்கள் ஆட்களாக இருக்கக் கூடாது என்று ஆண்டவனே வேண்டிக் கொண்டோர் பலர். பெரும்பாலும் மயிலிட்டியைச் சேர்ந்தவர்களே காணுமல் போனதாகக் கருதப்படுவதால் மயிலிட்டிக் கரையோரப் பகுதியிலுள்ளவர்கள் சோகமே உருவாகக் காணப்படுகின்றனர். சிலர் கதறி அழும் காட்சி கல்மனத்தையும் உருக்குவதாகவுள்ளது. வட, கிழக்குமாகாணக் கரையோரப் பகுதிகளில் இம்முறை நத்தார் கொண்டாடப்படவில்லை. அமைதியான முறையில் தேவாலயங்களில் பிரார்த்தனை நடைபெற்றது.

### சமூகசேவா அமைச்சருக்குத் தந்தி

சமூகசேவா அமைச்சருக்கு திரு. துரைரத்தினம் நேற்றுக்காலை ரேடியோ டெலிபோன்மூலம் அனுப்பிய அவசரத் தந்தியொன்றில், நூற்றுக்கு மேற்பட்ட மீனவர்கள் மாண்டுவிட்டனரென்றும் இதற்குமுன் ஏற்படாத பேரழிவு வடபகுதியில் ஏற்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளார். கிராமங்கள் பல அடித்துச் செல்லப்பட்டனவென்றும் உடனடியாக நிவாரண உதவி அளிக்க நடவடிக்கை எடுக்கும்படியும் அவர் அமைச்சரைக் கேட்டிருப்பதுடன் உடனடியாக சமூகசேவை இலாகா டைரக்டரை யாழ்ப்பாணத்துக்கு விமானத்தில் அனுப்புமாறும் கேட்டுள்ளார்.

## புயலினுல் மாண்டவர்கள் 250 என மதிப்பீடு

### ரூ. 20 கோடிக்கு பொருள் நஷ்டமாம்

கொழும்பு, வெள்ளி

புயலினல் மண்டவர்களின் எண்ணிக்கை பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லையாயினும், சுமார் 250 பேர்கள் மாண்டிருப்பார்கள் என்றும் பொருள் நஷ்டம் சுமார் 20 கோடி இருக்கும் என்றும் கொழும்புக்குக் கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

வடக்கு-கிழக்குமகாணங்களில் புயலினுல் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு உடை, உணவுப் பொருட்கள் ஆகியவற்றைக் கொடுத்து தவும்படி செஞ்சிலுவைச் சங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. இவ்விஷயமாக கொழும்பிலுள்ள தங்கள் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அது கேட்டுக்கொண்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புயலினுல் பாதிக்கப்பட்ட இடங்களில் கஷ்ட நிவாரணவேலையில் ஈடுபடுவதற்காக சௌக்கிய தான த் தொண்டர்கள் அழைக்கப்பட்டி

(5-ம் பக்கம் பார்க்க)

## இரணைதீவில் உணவு இல்லாமல் மக்கள் அவதி

### சமைத்துச்சாப்பிட சட்டிபானையைக்கூட சூருவளி விட்டுவைக்கவில்லை

#### இலவச ரேஷன்வழங்க முடிவு

யாழ்ப்பாணம், சனி

இரணைதீவில மக்கள் உணவும் உடையும் தங்க இட்முமின்றி அவதிப்படுவதாக அங்கிருந்துகிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

செல்வாய்க்கிழமை இரவு வீசிய புயலினுல் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் உயிரைப் பாதுகாக்கும்பொருட்டு தேவாலயத்திலும், கோயிலிலும், பாடசாலைகளிலும் தஞ்சம்புகுந்தனர். ஆனல் தஞ்சம புகுந்த இடத்தின் கூரைகளும் காற்றினுல் தூக்கி வீசப்பட்டு அவர்கள் நிர்க்கதியானுர்கள்.

வீடுகள் குடிசைகள் யாவும் முற்ருகச் சேதமடைந்துவிட்டன. உடைகள், உணவுப் பொருள்கள் மட்டுமன்றி சட்டி, பானை, பெட்டி, சாக்கு முதலிய சகல பொருள்களும் சேதமடைந்தும் காற்றில் அள்ளுண்டும் சென்றுவிட்டன, பெரும்பாலும் கடற்தொழிலாளர்களே வசிக்கும் இரணைதீவில் இப்பொழுது ஒரு மீனவரிடம்

(6-ம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

### தேசிய சுவீப் முடிவுகள்

நேற்று மாலை இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் பின்வருமாறு:-

முதலாவது பரிசு
06 L 0087—ரூபா 50,000

இரண்டாவது பரிசு
12 P 0631—ரூபா 16,000

மூன்ருவது பரிசு
07 M 0297—ரூபா 6,520

பிளாஸா தேயிலை
பாவிப்பாளர்களுக்கு !
ரூபா 15,000
( 283 பரிசுகள் காத்திருக்கின்றன )
போட்டியில் பங்குபெற இன்றே முந்துங்கள்.
விபரங்களுக்கு உங்கள் வியாபாரிகளைக் கேளுங்கள்.
பிளாஸா தேயிலை விலையில் மலிவானது,
தரத்திலும் குணத்திலும் உயர்வானது,
தேயிலை தரம் உருசிபார்க்கும்
நிபுணர்களால் பரிசோதித்து அடைக்கப்பட்டது.
இன்றே வாங்கிப் பருகி ஆனந்தமடையுங்கள்.

## மணிவாக்கு

சத்தியம், நேர்மை இவற்றைவிட மேலானமதம் இல்லை. உண்மையான சமயமும், உண்மையான ஒழுக்கமும் பிரிக்க முடியாதவை. மண்ணில் விதைக்கப்பட்ட வித்துக்கு நீர் எப்படியோ அதுபோல ஒழுக்கத்துக்கு மதமுமாகும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna.
Telegrams: 'EELA NADU' Jaffna
Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 12 உ. (26-12-64)


## கடவுளின் சோதனை

புயல் காரணமாக ஏற்பட்டிருக்கும் உயிர் நஷ்டமும், பொருள் நஷ்டமும் நெஞ்சை உருக்குவதாய் இருக்கிறது. வடமாகாணத்தில் மன்னார்பகுதியும், கீழ்மாகாணத்தில் திருக்கோணமலையும் நரகக்காட்சிக் காட்சியளிக்கின்றன.

மனித உயிர் எவ்வளவு விலை மதிப்பற்றது என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்த நிலையில் 200 மீனவர்கள் ஆழ்கடலில் அடித்துச் செல்லப்பட்டது, எதிர்பாராத திடுக்கிடும் சம்பவமாகும். உயிரிழந்த இந்தப் பாட்டாளிகளை நம்பி எத்தனை உயிர்கள் ஜீவித்து வந்தனவோ. தங்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் உரியவர்களின் சோக முடிவைக் கேட்டு உறவினர்களின் நெஞ்சம் எப்படித் துடித்தனவோ. இச்சமயம் அவர்கள் கண்ணீருடன் கலந்து கொண்டு, ஆறுதல் சொல்வதைத்தவிர வேறு வழி எதுவுமில்லை.

புயலும், கடல் கொந்தளிப்பும் நம்மைக் கேட்டுக்கொண்டு வருவதில்லை. இது கடவுளின் சோதனை. எனவே இந்தநிலையில் எவரையும் நாம் குறை கூறுவதற்கில்லை.

இது மனிதாபிமானப் பிரச்சினை மட்டுமல்ல, அதற்கும் மேற்பட்ட மனித உயிர்ப் பிரச்சினை. உயிரையும் பொருளையும் இழந்து தவிக்கும் மக்களுக்கு அரசாங்கம் தக்கவகையில் உதவ வேண்டும். அவர்களின் கஷ்டத்துடன் இரண்டறக் கலந்து உதவியும் ஒத்தாசையும் செய்ய வேண்டும்.

உயிரிழந்த மீனவர்களின் சவஅடக்கத்திற்காக தலா 300 ரூபாய்வீதம் அரசாங்கம் உதவியளித்திருக்கிறது. எனினும் இறந்தவர்களை நம்பி, இருந்தவர்களுக்கு இதுபோதுமான நஷ்டஈடு அல்ல. வீடுகளையும் விளைநிலங்களையும் இழந்து தவிப்பவர்களுக்கு போதுமான உதவிசெய்ய அரசாங்கம் முன்வர வேண்டும். அதேசமயம் அரசாங்கத்தை மட்டும் நம்பியிராமல் பொதுமக்களும் பொது ஸ்தாபனங்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யவேண்டும். சிரமதானத் தொண்டர்கள் நிவாரண வேலைகளில் ஈடுபட வேண்டும்.

## பரீட்சை இருந்தும் தோற்றமுடியவில்லை

மாவிட்டபுரம், புதன்

அடுத்த வருடம் மார்ச் மாதம் 6-ந் திகதி இலங்கை முழுவிதும் நடைபெறவிருக்கும் மத்திய எழுதுவினைஞர் பரீட்சைக்கு விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி நேற்றுடனிருந்த போதிலும் பல பரீட்சார்த்திகளால் விண்ணப்பத்திரங்கள் அனுப்பமுடியாதுபோய் விட்டதாக அறியப்படுகிறது. பரீட்சைப் பகுதியினர் விண்ணப்பப்பத்திரங்கள் கேட்டு மனுப்பண்ணியவர்களுக்கு உரிய காலத்தில் விண்ணப்பப்பத்திரம் அனுப்பத் தவறியமையும் இதுவரை அனுப்பாமையுமே முக்கிய காரணமெனக்கூறப்படுகிறது. மேலும் மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரங்கள்கேட்டுமனுப்பண்ணிய சிலருக்கு குருவித்தியாலய புதுமுகப் பரீட்சை விண்ணப்பப்பத்திரம் தவறுதலாக அனுப்பப்பட்டமையால் இவர்களாலும் விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பமுடியவில்லை. விண்ணப்பப்பத்திரங்கள் கிடைத்த சிலருக்குத் தேவையான முத்திரைகள் கிடைக்கவில்லை. இக்காரணங்களால் பல விண்ணப்பதாரர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

## இயல் இசை மகாநாடு

ஊர்காவற்றுறை, புதன்

அகில இலங்கை இசை ஆசிரியர் சங்கம் வேலணை மேற்கு இளைஞர் கழகத்தின் ஆதரவில் இயலிசை மகாநாடு ஒன்றை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

இம்மகாநாடு தமிழர் திருநாளாகிய தைப்பொங்கல் அன்று வேலணை மேற்குபிள்ளையார் ஆலய வீதியில் நடைபெறவிருக்கிறது.

இயற்றமிழ் மகாநாட்டுக்கு ஊர்காவற்றுறை முன்னாள் எம். பி. திரு. வி நவரத்தினம் தலைமைதாங்குவாரெனவும் இசை மகாநாட்டிற்கு சங்கீதபூஷணம் பி. சந்திரசேகரம் தலைமைவகிப்பாரெனவும் அறியப்படுகிறது.

இயல் விழாவில் திரு கே. பி. ஹரன், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உட்படப் பலர் சொற்பொழிவாற்ற அழைக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

இசை விழாவில் ஆசிரியசங்கத்தைச் சேர்ந்த சங்கீதபூஷணங்களின் சங்கீதக்கச்சேரிகள் நடைபெறவிருக்கிறது.

---

வடபகுதியில் சென்றமுறை வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம் அதிகம். எனினும் போதுமான உதவி அரசாங்கத்திடமிருந்து கிடைக்கவில்லை. ஆனால் இந்தமுறை பொருள் நஷ்டம் மட்டுமன்றி ஏராளமான உயிர் நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் உணர வேண்டும். இவ்விஷயத்தில் அரசியல், கட்சி, இனம்போன்ற சிந்தனைகள் இடம் பெறக்கூடாது.

நூற்றுக்கணக்கான உயிர்கள் இந்நாட்டில் பலியாகியிருக்கும் சமயத்தில் தென்னிந்தியக்கரையிலும் இதே போன்ற நெஞ்சைப் பிளக்கும் சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஐந்நூறு பேருக்குமேல் அங்கு பலியாகியிருக்கிறார்கள். புனித இராமேஸ்வரமும் தனுஷ்கோடியும் பாம்பன்பாலமும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அக்கரையிலும் இக்கரையிலும் மாண்டவர்களுக்காக வருத்தத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# வவுனியாவில் இருவர் பலி; வட்டக்கச்சியில் யுவதி மரணம்

## இராணுவமுகாம் பலத்தசேதம் மன்னாரில் கடல் கொந்தளிப்பு!

### இராணுவ முகாம் சேதம்

திருகோணமலையில் உள்ள அரசாங்க உணவுப் பண்டசாலை உட்பட பல்வேறு கட்டிடங்களில் கூரைகள் தூக்கி எறியப்பட்டன என சமூக சேவை டைரக்டர் திரு. ஆர். டி. ரணதுங்கா தெரிவித்தார். பூநகரி துணுக்காய் பகுதிகளிலும் அதிக சேதம் ஏற்பட்டுள்ளன.

மன்னார்ப் பகுதியில் கடல் சுமார் 20 அடி உயரத்திற்கு பொங்கி எழுந்ததால் மன்னார் தீவு பல அடி ஆழ்ந்துள்ளது. கொழும்பிலிருந்துசென்ற நிவாரணக் குழு பலவித கஷ்டங்களுக்கிடையே மன்னாருக்குச் சென்றுள்ளது.

மன்னாரில் சுமார் 300 இராணுவத்தினருக்குமேல் தங்கியிருந்த இராணுவ முகாம் முற்றாகச் சேதமடைந்தது, நிரந்தரமான கட்டடங்களைக் கொண்ட இந்த இராணுவ முகாம் பலத்த சேதமடைந்துள்ளது.

### ஆனையிறவு

ஆனையிறவு அரசாங்க உப்பளம் உட்பட பல இடங்களில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது உப்பளத்தில் உடைமைகள் பல சேதமடைந்தமையால் பல்லாயிரக்கணக்கான ரூபாய் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. பல வீடுகளும் கடைகளும் கூரைகள் இன்றியும் இடிந்து விழுந்தும் காணப்படுகின்றன. இங்கு ஒரு வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த ஒருவர் தனது தலையில் ஓடு விழுந்து காயமேற்படுத்தியதைத்தொடர்ந்து தனது மனைவி மக்களுடன் வேறு இடத்திற்குச் செல்ல, வீட்டை விட்டு வெளியேறியவுடன் அந்த வீட்டுச் சுவர் அப்படியே இடிந்து விழுந்தது.

### நுணாவில்

நுணாவிலில் உள்ள காய்கறித் தோட்டங்கள் அனைத்தும் நாசமாகியுள்ளன. இங்குள்ள அம்பலவாணர் என்பவரின் தோட்டத்தில் இரண்டாயிரம் ரூபாவிற்குமேல் பலன் தரக்கூடிய பயிர்கள் சேதமடைந்துள்ளன இப்பகுதியில் இவற்றையே நம்பியுள்ள பல விவசாயிகள் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

இங்குள்ள பழனி என்பவரின் வீட்டின்மேல் பிரமாண்டமான வேப்பமரமொன்று விழுந்து பலத்த சேதத்தை உண்டாக்கியுள்ளது. உள்ளே இருந்த இவரது குடும்பத்தினர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

### இளம் பெண்ணின் பரிதாப மரணம்

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வீசிய பெரும் புயலினால் வட்டக்கச்சியில் பதினெட்டு வயது யுவதி யோகம் என்பவர் பரிதாபமானநிலையில்மரணமானார். இறுதிநேரத்திலும் உயிரைக் காப்பாற்ற விரும்பிய இப்பெண் 'அம்மா அம்மா' என்று அருகில் இருந்த தாயாரை அழைத்ததாகவும், ஆனால் மரத்தின் கீழ் சிக்குண்ட தாயார் மயக்கமடைந்திருந்ததாகவும் கூறப்படுகிறது

மரத்தின்கீழ் அகப்பட்டு இறுதி நேரத்திலும் தன் உயிருக்காகப் போராடிக்கொண்டு உதவி கோரிய அந்த இளம் பெண்ணை இருட்டு வேளையில் எவருமே காப்பாற்ற முடியாததால் உயிர் பிரிந்தது.

அந்நேரம் அவ்வீட்டிலிருந்த தாயார் படுகாயமடைந்ததால் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார், மற்றும் சிலரும் காயமடைந்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

வீட்டின்மீது மரம் விழுந்த சமயத்தில் எல்லோரும் நித்திரையாக இருந்ததாகவும், வெளிச்சம் இல்லாததால் எங்கும் ஒரேஇருளாக இருந்ததாகவும் கூறப்படுகிறது

மரத்தின்கீழ் சிக்கி நசுங்கிய அப்பெண்ணை மீட்பதற்கு எவராலும் முடியாமல்போய்விட்டது

### முல்லைத்தீவு

கடந்த செவ்வாய்க்கிழமை வீசிய பெரும் புயலினால் தண்ணீரூற்று முள்ளியவளை வற்றாப்பளை வட்டுவாகல், முள்ளிவாய்க்கால் பொக்கணை புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகள் முற்றாகச் சேதமடைந்துவிட்டன.

முல்லைத்தீவு பிச் ரோட்டில் உள்ள வீடுகளெல்லாம் சேதமடைந்துள்ளன. வீடிழந்த ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் அருளப்பு என்பவருக்குச் சொந்தமான மண்டபத்தில், தஞ்சமடைந்தனர். பொதுமக்கள் அவர்களுக்கு இலவசமாக உணவளித்துவருகிறார்கள்.

முல்லைத்தீவில் உள்ள சிவசோதி சினிமா நிஸாம் தியேட்டர் பலநோக்குக் கூட்டுறவுச் சமாசம் பொதுசேவை வழியர்கள் கிளப் மற்றும் ஏராளமான கட்டடங்களின் கூரைகள் காற்றினால் சேதமடைந்துவிட்டன. மில் ஒன்றும் சேதமடைந்துவிட்டது

வவுனியா முன்னாள் எம். பி. திரு டி. சிவசிதம்பரம்புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளித்துவருகிறார்.

சில பகுதிகளில் மக்கள் பள்ளிநிலையத்தை அடைவதற்கு சுமார் ஒன்பது மைல் தூரம் நடந்துசெல்கிறார்கள். தந்திக் கம்பங்கள் மின்சாரக் கம்பங்கள் முறிந்துவிழுந்துவிட்டன. பெரிய மரங்கள் பிரதான பாதைகளில் முறிந்துவிழுந்துவிட்டன.

### வவுனியா

வவுனியாவில் மூன்று நெல்குத்தும் ஆலைகளும் மரக்குளம் புளியங்குளம் ஓமந்தை ஆகிய இடங்களிலுள்ள ஆலைகளும் பலத்த சேதமடைந்தன.

கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்காக லீவில் சென்றிருந்த வவுனியா அரசாங்க அதிபர் திரு வி. எம். சேனநாயக்கா உடனடியாக வவுனியா வந்து புயலினால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிப்பார்த்து தேவையான உதவிகள் செய்தார். வீடிழந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கு உணவு உடைகள் வழங்க ஏற்ற ஒழுங்குகள் செய்துவருகிறார்.

விமானம் மூலம் அல்லது ஹெலிகோப்டர் மூலம் உணவுகளும் உடைகளும் இன்று வழங்க ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

### நிவாரண ஏற்பாடு

சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் திரு. பி. நாகலிங்கம் வடமாகாண உதவி அரசாங்க அதிபர் திரு. பெருமையினரையும் சமூகசேவைத் தலைவரையும் சந்தித்துப் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அடுத்தவாரப் பங்கீட்டரிசியை இலவசமாக வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

வாழைத் தோட்டத்தையே நம்பி வாழ்க்கை நடத்துவபவர்களுக்கும் சிறு குடிசைகளில் வசித்தவர்களுக்கும் முதலில் பங்கீட்டரிசியை வழங்கவேண்டுமெனவும் திரு.

(6-ம் பக்கம்பார்க்க

(5-ம் கலத் தொடர்ச்சி)

எறுப்பாய் போற்றி பாரோர் விண்ணோ ணத் தப் படுவாய் போற்றி, தொண்டர் பரவு மிடத்தாய் போற்றி தொழில் நோக்கியாளும் சுடரே போற்றி, கண்டல் கறுக்கவும் வல்லாய் போற்றி கயிலைமலையானே போற்றி போற்றி.

— அப்பர் சுவாமிகள்

## ஐயாறன் எழுதுவது

காற்று வந்ததால் மரமசைந்ததா மரமசைந்ததால் காற்று வந்ததா? இரு நாட்களுக்கு முன் பேயாட்டம் ஆடிய மரங்களெல்லாம், போனது போக மற்றவை இப்போது ஆடாமல் அசையாமல் அப்படியே நிற்கின்றன. காற்று வந்ததால் தான் மரங்கள் அன்று அசைந்தன. காற்று நின்றது. மரங்களும் அசையவில்லை. புயலுக்குப்பின் ஒரே அமைதி. சினிமாக் கேள்விக்குப் பதிலும் கிடைத்தது.

அந்தக் காற்று ஏன் வந்தது? எங்கிருந்து வந்தது? எங்கே போயிற்று? மீண்டும் வருமா? வராமல் தடுக்க முடியுமா? என்று பல பல கேள்விகள் மனதில் எழுகின்றன.

* * *

வங்கக்கடலிலே இந்தப் புயல் பிறந்ததாம். மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா. யாழ்ப்பாணம் இவ்வழியே தனுஷ்கோடி, ரமேச்சரம், இராமநாதபுரம் இவ்விடங்களிலே பெரும் சேதம் ஏற்படுத்திவிட்டுச் சென்றுவிட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. கிழக்கு, வடக்கு மாகாணங்களையும், தமிழ்நாட்டையும் இந்தப் புயல்கூட பிணைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது ஏன் வரவேண்டுமென்று ஓரன்பரைக் கேட்டேன் ஸ்ரீமாதான் காரணமென்றார் அவர். அப்படியாயின் ஸ்ரீமாவின் ஊரிலோ அல்லது தென் இலங்கையிலோ இது அடிக்காமல், ஏன் தமிழ் கூறும் நல்லுலகில் மட்டும் வீசி இந்தச சேதத்தை ஏற்படுத்த வேண்டும்? தமிழர் சிந்திக்கவேண்டிய விஷயமல்லவா இது?

* * *

கிளிநொச்சியிலிருந்து ஓர் அன்பர் எழுதியதாவது.-

மனதார வேண்டிப் பிரார்த்திக்கும் பிரார்த்தனைக்குப் பலனுண்டு என்பதை, இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் மழைக்காக நடத்திய அகண்டநாம பஜனையின் போது காணக்கிடைத்தது.

பஜனை தொடங்கும் சமயத்தில் மழை பெய்ய ஆரம்பித்துப் பின இடையிடையே விட்டுவிட்டுப் பெய்தது. அருட்திரு. வடிவேல்சுவாமிகள் தலைமையில் சில மெய்யடியார்கள் நாம பஜனை செய்தார்கள். கண்ணீர் சொரிய உருக்கத்துடன் செய்த பிரார்த்தனை பக்தர்கள் அனைவரின் உள்ளத்தையும் உருக்கியது. ஆலயத்துக்கு வந்தவர்களில், பஜனையில் கலந்துகொள்ளாமல் வேடிக்கை பார்த்தவர்களுமிருக்கனர்.

இன்று செவ்வாய் முதல் நல்ல மழை பெய்கிறது. பிரார்த்தனை நடக்கும் போது கருணை மழை பொழிந்தது. மகிழ்ச்சி காரணத்தால் இதை எழுதினேன்."

* * *

பிரார்த்தனைக்குப் பலனுண்டு என்பதற்கும், நம்பினோர் நலமடைவர் என்பதற்கும் இது நல்லதோர் அத்தாட்சியே. ஆனால் மழையுடன் சேர்த்துப் புயலும் அடிப்பானேன். தமிழ்ப் பகுதியில் பெருஞ் சேதங்கள் ஏற்படுவானேன்? தமிழர் அன்பு வழியிலிருந்து மாறிவிட்டனரா? சமூக அநீதிகள் அதிகரித்துவிட்டதாகவும், சுயநலங்கள் பெருகிவிட்டதாகவும் ஓரன்பர் கூறுகிறார். மக்கள் தங்கள் தவறை உணர்ந்து திருத்திக் கொள்ளத்தான் பூகம்பம், புயல் முதலிய உற்பாதங்கள் மூலம் கடவுள் எச்சரிக்கை செய்வதாக மகாத்மா காந்தி அடிகள் கூறுவதுண்டு. இந்தப் பயங்கரப் புயலும் நம்மைச் சிந்திக்கவைத்து நம்மை நாம் திருத்திக்கொள்ள உதவ வேண்டும்.

* * *

அண்டமேழன்று கடந்தாய் போற்றி ஆதிபுராணனாய் நின்றாய் போற்றி, பண்டைவினைக

(4-ம் கலம் பார்க்க)

# நூற்றுக்கணக்கானோர் புயலுக்கு பலி!

## திருமலை, மன்னாருக்கு போக்குவரத்து முற்றாக துண்டிப்பு

### திருமலையில் கோடிக்கணக்கில் நஷ்டம்

கொழும்பு, வெள்ளி

**கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஏற்பட்ட புயலை அடுத்து திருக்கோணமலை, மன்னார், வவனியா, வடகிழக்கின் சில பகுதிகள் ஆகியவற்றுடன் இன்னும் போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.**

ரோயல் இலங்கை விமானப் படை விமானங்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உதவியளித்து வருகின்றன.

வவனியா, மன்னார் ஆகிய இடங்களில் பயிர்களுக்கும், கட்டிடங்களுக்கும் பெருஞ் சேதம் ஏற்பட்டிருக்கிறது. பெருந்தீவு - பருத்தித்துறை - பாசலுநீரிணையில் மீனவர்கள் சிக்கியிருப்பதாயும் கூறப்படுகிறது.

வவனியா, முருங்கன், மாங்குளம் ஆகிய ஊர்களுக்குச் செல்லும் பாதைகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

வவனியாவிலும், சுற்றியுள்ள பகுதியிலும் கூரைகள் அடித்துச் செல்லப்பட்டன.

**மன்னாரில் மோச நிலைமை**

மன்னாரிலிருந்து அரிப்புவரை மாபெரும் நீர்த்தேக்கமாகக் காணப்படுகிறது. பல கட்டிடங்களுக்கும் கூரைகளுக்கும் இங்கு சேதமேற்பட்டுள்ளன. மன்னாருக்குச் செல்லும் ஒரே வழி இப்போது கடல் மார்க்கமே. மன்னாருக்கும் முருங்கனுக்குமிடையே புகையிரதப் பாதை சேதமேற்பட்டுள்ளது.

**திருமலை சேதம் கோடிக்கணக்கில்**

திருக்கோணமலை, மன்னார் ஆகிய இடங்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாயும், திருக்கோணமலையில் அரைவாசிக் கட்டிடங்கள் கூரையிழந்த நிலையில் காணப்படுவதாயும் அங்கு விமானத்தில் பார்வையிட்ட சமூகசேவை அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கொஹடன் விக்ரம கூறினார்.

திருமலையில் மின்சாரம் முற்றாகத் துண்டிக்கப்பட்டது. டெலிபோனும் இதே நிலையில் சிதைந்துள்ளது. இதனைத் திருத்த பல வாரங்கள் பிடிக்குமென மதிப்பிடப்பட்டுகிறது.

**ஆஸ்பத்திரியில் 1000 பேர்**

திருக்கோணமலையில் ஏற்பட்டுள்ள சேதம் பல கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. திருமலை ஆஸ்பத்திரியில் ஆயிரத்துக்கதிகமானோர் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

திருமலை துறைமுகத்தில் கப்பல்களும் பாதிக்கப்பட்டன. சேதம் பற்றி ஆராய இங்கு நடைபெற்ற ஸ்தலஸ்தாபன அதிகாரிகள் மகாநாட்டுக்கு ஒரு டி. ஆர். ஓ 25 மைல் தூரம் நடந்துவரவேண்டி ஏற்பட்டது என்றும் கூறப்பட்டது.

மன்னாரில் அதிக அளவு கட்டிடங்களுக்குச் சேதம் ஏற்பட்டது. அநேக கூரைகள் அடித்துச் செல்லப்பட்டன. கடல் மார்க்கமாகவே மன்னாருக்கும் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

படை வீரர்கள், பொலிசார், தொண்டர்கள் ஆகியோர் நிவாரண வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

**200 பேர் மாண்டனராம்**

இலங்கையில் புயலினால் 200 பேர் வரை மாண்டிருப்பதாக இந்தியச் செய்தி ஒன்று கூறுகிறது.

# உலகெங்கும் கிறிஸ்மஸ் தின பிரார்த்தனைகள்

லண்டன், டிச. 25

உலகின் பலபகுதிகளிலும் கிறிஸ்மஸ் தினம் கொண்டாடப்பட்டது.

கிறிஸ்துநாதரின் பிறந்த இடமான பெத்லஹேமில் நடைபெற்ற நள்ளிரவுப் பிரார்த்தனைகளில் அராபியக் கிறிஸ்தவர்களும் பெருந்தொகையாகக் கலந்து கொண்டனர். யாத்ரீகர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகமாய் இருந்தது.

ஆயிரக்கணக்கான மேற்கு பேர்லின் மக்கள் கிழக்குப் பகுதியிலுள்ள தங்கள் உறவினர்களுடன் கிறிஸ்மஸைக் களிப்பதற்காக அனுமதிக்கப்பட்டார்கள். அதேபோல் ஆயிரக்கணக்கான கிழக்கு ஜெர்மன் மக்களும் மேற்கு பேர்லினுக்குள் பிரவேசித்தார்கள்.

ரோமாபுரியில் கிறிஸ்மஸ் தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. பாப்பரசர் விடுத்துள்ள செய்தியில் உலகசமாதானத்தை வற்புறுத்தினார்.

பிரிட்டனில் நடைபெற்ற நள்ளிரவுப் பூசையை கோடிக்கணக்கானோர் டெலிவிஷனில் கண்டனர்.

மகாராணி எலிஸபெத் கிறிஸ்மஸ் தின செய்தி ஒன்றை விடுத்திருக்கிறார்.

# லியப்போல்ட்வில்லியில் துருப்புக்கள் உஷார்

## கிளர்ச்சித் தாக்குதல் ஏற்படும் என அச்சம்

லியப்போல்ட்வில், டிச 25

காங்கோ தலைநகர் லியப்போல்ட்வில்லியை கிளர்ச்சிக்காரர்கள் பெருமளவில் தாக்குதல் நடத்தவிருக்கிறார்கள் என்ற ஒரு செய்தியை அடுத்து துருப்புகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டன.

முக்கிய பொதுக் கட்டிடங்களில் பாரசூட் துருப்புகள் வைக்கப்பட்டன. வானத்தில் விமானங்கள் வட்டமிட்டவண்ணம் இருந்தன. காங்கோ பிரச்னையைத் தீர்க்க புதாண்ட் ஆபிரிக்க ஐக்கிய ஸ்தாபனத்துடன் ஒன்றுபட்டு ஒரு பரிகாரம் காணவேண்டும் என சில ஆபிரிக்க நாடுகள் யோசனை தெரிவித்திருக்கின்றனர்.

## மணிக்கு 2000 மைல் விமானம்

வாஷிங்டன், டிச. 25

80,000 அடி உயரத்தில் மணிக்கு 2000 மைல் வேகத்தில் செல்லக்கூடிய சூபர்ஸானிக் விமானம் ஒன்று கலிபோர்னியாவில் வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டது.

---

திருவனந்தபுரம், டிச 25

பெப்ரவரி 15-ம் திகதி கேரளத்தில் இடைக்காலத் தேர்தலை நடத்த வேண்டுமெனத் தாம் கவர்னருக்கு சிபார்சு செய்யப்போவதாய் தேர்தல் கமிஷனர் திரு. சுந்தரம் அறிவித்தார்.

# இராமேஸ்வரத்தில் 500 பேர் மாண்டனர்!

## ரயிலில்சென்ற பிரயாணிகளின் தலைவிதி இன்னும் தெரியவில்லை.

### லோகசபையில் வருத்தம்

சென்னை, டிச. 25

**புயல், கடல் கொந்தளிப்பு காரணமாக இராமேஸ்வரத்தில் ஏற்பட்ட உயிர்நஷ்டம் முன்பு கிடைத்த தகவலைவிட மிகஅதிகம் இருக்கும் என அறிவிக்கப்பட்டது. சென்னை பொலிஸ் தலைமைக்காரியாலயத்திற்கு கிடைத்துள்ள தகவல்களிலிருந்து இதுவரை 500 பேர் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.**

தனுஷ்கோடியிலும், பாம்பனிலும் 200 சடலங்கள் கரையில் ஒதுங்கியதாயும், சம்பவதினத்தன்று இரவு பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு ஒரு ரயில் சென்றதாயும், இந்தப் பிரயாணிகளின் கதி என்னவென்பது இன்னும் தெரியவில்லை என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

தனுஷ்கோடிக்கருகில் பலியானவர்களில் பெரும்பாலோர் மீனவர்கள் எனக் கூறப்படுகிறது. இராமேஸ்வரத்துடன் தொடர்புகள் முற்றும் துண்டிக்கப்பட்டதாகவும், விரைவில் தகவல் தொடர்பு நிலைநாட்டப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்துவரும் விமானங்களுடன் மேலும் இரு ஹெலிகொப்டர்கள் இன்று சேர்ந்து கொண்டன.

விபத்தைப் பார்வையிட்ட சென்னைமந்திரி ராமையா பாம்பன்பாலம் முற்றாக அழிந்துவிட்டது எனக் கூறினார்.

லோகசபையில் உள்நாட்டு மந்திரி திரு. நந்தாவும், சபாநாயகரும் இந்தக் கோர உயிர்பலி குறித்து அனுதாபமும் வருத்தமும் தெரிவித்தனர். திரு. லால்பகதூர்சாஸ்திரி பிரதமமந்திரி நிதியிலிருந்து ரூ. 25,000 சென்னை முதன் மந்திரி திரு. பக்தவத்சலத்துக்கு அனுப்பியிருக்கிறார். நிவாரண வேலைகளுக்கு இது உபயோகிக்கப்படும்.

## அமெரிக்காவில் 40 பேர் பலி

வாஷிங்டன், டிச.

அமெரிக்காவின் 5 மேற்கு ராஜ்யங்களில் ஏற்பட்ட புயல், கடல் கொந்தளிப்பு காரணமாக 40 பேர் மாண்டனர். 1000 பேர் தங்கள் இல்லங்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்குத் திரும்பிச் சென்றனர். பாதிக்கப்பட்ட பகுதிகள் அழிவுப் பகுதிகளாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன.

## கெய்ரோவுக்கு யு. எஸ். உதவி நிறுத்தம்?

வாஷிங்டன், டிச. 25

காங்கோவில் உ[illegible] வருவதால் ஐக்கிய அராபியக் குடியரசுக்கு அமெரிக்க உதவி நிறுத்தப்படக்கூடும் என வெளிநாட்டு மந்திரி ரஸ்க் தெரிவித்தனர். [illegible] அறி[illegible]திருக்கிறார்.

## யு. எஸ். ஆட்சேபம் கெய்ரோ நிராகரிப்பு

கெய்ரோ, டிச. 25

அமெரிக்க விமானம் ஒன்றை ஐக்கிய அராபியக் குடியரசு சுட்டு வீழ்த்தியதற்கு இங்குள்ள அமெரிக்கத் தூதர் ஆட்சேபனை தெரிவித்துக் கொண்டார். ஆனால் இந்த ஆட்சேபனையை ஏற்க வெளிநாட்டு இலாகா மறுத்ததுடன், பிரதேச எல்லையை மீறும் அன்னிய விமானங்களை சுட்டு வீழ்த்த உரிமை உண்டு என்றும் அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

## ஜின்னா பிறந்ததினம்

கராச்சி, டிச. 25

திரு. ஜின்னாவின் பிறந்த தினம் இன்று பாகிஸ்தான் முழுதும் கொண்டாடப்பட்டது. கொடிகளும், தீபாலங்காரங்களும் காட்சியளித்தன.

## சாஸ்திரி

புதுடில்லி, டிச. 25

காஷ்மீரில் இந்திய அரசியல் சாஸனம் விஸ்தரிக்கப்பட்டது உள்நாட்டு விஷயமென்றும், பாகிஸ்தான் ஆட்சேபனையை பொருட்படுத்தக்கூடாது என்றும் பிரதம மந்திரி சாஸ்திரி காங்கிரஸ பாராளுமன்றக் கூட்டத்தில் கூறினார்.

நாகாலாந்துக்குச் சுதந்திரம் வேண்டுமென வற்புறுத்தப்பட்டால் சமாதானப்பேச்சுவார்த்தைக்கு ஆதாரம் இல்லாமலே போய்விடும் என்றும் அவர் கூறினார்.

சிக்கிம், பூட்டான் ஆகிய நாடுகளுக்கு உள்ள அந்தஸ்தை நாகாலாந்துக்கு வழங்கும் யோசனை எதுவும் கிடையாது என்றும் அவர் கூறினார்.

# சைகோன் அமெரிக்க காரியாலயத்தில் குண்டுவெடிப்பு

## இருவர் பலி 50 பேர் காயம்

சைகோன், டிச. 25

சைகோனில அமெரிக்க ராணுவக் காரியாலயத்திற்கருகே ஒரு குண்டுவெடித்ததால் 2 அமெரிக்கர் கொல்லப்பட்டனர். 50 பேர் காயமடைந்தனர்.

வெளியில் நின்ற கார் ஒன்றில் இந்தக் குண்டு பொருத்தப்பட்டிருந்ததென்றும், கார் ஆகாயத்தில் பறந்ததென்றும், யன்னல்கள் நொறுங்கின என்றும் அறிவிக்கப்படுகிறது.

அமெரிக்க ரேடியோ நிலையம் இதனால் முற்றாகச் சேதமடைந்தது.

வியட்காங்கியர்தான் இந்த வேலையைச் செய்ததாக அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் வியட்னாம் பிரதம சேனாதிபதி ஜெனரல் கானுக்கும், அமெரிக்கத்தூதர் ஜெனரல் டெய்லருக்குமிடையே கடும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருப்பதாய்த் தெரிகிறது.

# நேரு பிறந்ததினம் உலக குழந்தைகள் தினம்ஆகிறது

## யுனெஸ்கோ முடிவு

புதுடில்லி, டிச. 25

ஸ்ரீநேருவுக்கு தேசிய நினைவுச்சின்னம் அமைக்கும் ஏற்பாட்டில் டில்லிக்கருகே ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகம், குழந்தைகள் பொழுதுபோக்கு நிலையங்கள், கலாசார நிலையங்கள் ஆகியன அடங்கியுள்ளன.

அவரது பிறந்ததினமான நவம்பர் 14-ம் திகதி சமாதானத்திற்கு பெரும் சேவை செய்த உலகப் பிரமுகர்களை கொண்டு நேரு நினைவு சொற்பொழிகள் ஆற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் ஒருலட்சம் ரூபாய் பரிசளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நேரு பிறந்த தினத்தை உலகக் குழந்தைகள் தினமாகக் கொண்டாட ஐ. நா. கல்வி, கலாசார, சமூக ஸ்தாபனம் முடிவு செய்திருக்கிறது.

## 15-வது வாக்கெடுப்பு

ரோமாபுரி, டிச. 25

இத்தாலியில் ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய 15 முறை வாக்கெடுப்பு நடந்தும் வெற்றிபெறவில்லை. 16-வது வாக்கெடுப்பு இன்று நடைபெறும்.

---

ஏடன், டிச. 25

ஏடனில் சந்தேக முறையில் நடந்த ஒரு அராபியனை பிரிட்டிஷ் வீரர் ஒருவர் சுட்டுக் கொன்றார். அன்று கிளர்ச்சிக்காரர்களுக்கு ஐக்கிய அராபியக் குடியரசு [illegible] அளித்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

# கிராம முன்னேற்ற சங்க சமாஜம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

நல்லூர், வியாழன்

"பொருளாதாரத்துறையிலேனும், கலாச்சாரத் துறையிலேனும் அபிவிருத்தி ஏற்பட முடியுமானால் அது கிராம முன்னேற்ற இயக்கத்தின் ஆதரவிலேயே ஏற்பட முடியும்" என்று வலி-வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசபிள்ளை வலி-வடக்கு கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள பல துறைகள் அபிவிருத்தித் திட்டங்களைச் சேர்த்துப் பரிசீலனை செய்து பல அம்சங்களைக் கொண்ட முன்னேற்றத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்,

வலி-வடக்கிலுள்ள கிராம முன்னேற்றச் சங்கங்களினதும் மாதர் முன்னேற்றச் சங்கங்களினதும் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மகாநாட்டில் கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாஜம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:-

தலைவர்- பண்டிதர் வ. நடராசன் உப-தலைவர்- பண்டிதர் க. நாகலிங்கம், இணைக்காரியதரிசிகள்- சிவஸ்ரீ க. து. ஷண்முகநாதக்குருக்கள், எஸ். சண்முகலிங்கம் தனாதிகாரி திரு. எஸ உலகநாதர். 21 கிராம சேவையாளர்கள் பிரிவிலிருந்தும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.


ராஜா சினிமா
(சுழிபுரம்)
கல்யாணகுமார்-தேவிகா
நடிக்கும்
நெஞ்சம் மறப்பதில்லை

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன்: 485
மனோகர்-பண்டரிபாய்
நடித்த
புனிதவதி


இராமநாதபுரம் கொலை கடத்தல் வழக்கு

# "சம்பவம் நடந்ததினம் நித்திரையாக இருந்தேன்"

## 5-ம் 6-ம் எதிரிகளின் தந்தை சாட்சியம்; நீதிபதி எச்சரிக்கை

சாவகச்சேரி, வெள்ளி

"சம்பவம் நடந்த அன்று நான் நல்ல நித்திரையாக இருந்தேன். அன்றிரவு என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது" என்று இராமநாதபுரம் கொலை, கடத்தல் வழக்கில் சாட்சியமளித்தவரும் 5ம் 6ம் எதிரிகளின் தந்தையுமான ஜோசப் கூறினார்.

இத்தருணத்தில் வழக்காளி தரப்பில் ஆஜரான திரு. ஆர். கண்ணுத்துரை, சாட்சி தனது பிள்ளைகளைக் காப்பாற்றப் பொய் சொல்கிறாரென்றும், பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்திற்கும் தற்பொழுது அளிக்கும் வாக்குமூலத்திற்கும் முரண்பாடு இருப்பதாகவும் நீதிபதியிடம் கூறினார். இதைத் தொடர்ந்து அவர் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலம் கோர்ட்டில் வாசிக்கப்பட்டது.

நீதிபதி ஒருசந்தர்ப்பத்தில் சாட்சியைப் பார்த்து பொய்ச் சாட்சி கூறினால் மறியல் தண்டனை கிடைக்குமென்று எச்சரிக்கை செய்தார்.

இராமநாதபுரம் வழக்கு நேற்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ஜெ்ராபர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

### குற்றச்சாட்டு

இவ்வழக்கில் வட்டக்கச்சியைச் சேர்ந்த வி. தனுஷ்கோடி, கே. நடராசா, கே. குணசிங்கம், வி. சண்முகம் ஜே. ஞானப்பிரகாசம், ஜே. வரப்பிரகாசம், ஆர். கந்தையா ஆகிய 7பேர்மீதும் சட்டவிரோதமாக கூட்டங்கூடி வைரவநாதன் ஆறுமுகம் என்பவரின் வீட்டிற்குள் நுழைந்து அவரைக் குத்திக் கொலைசெய்ததாகவும், அவரது மகள் பூரணத்தைப் பலவந்தமாகக் கடத்திச் சென்று கெடுத்ததாகவும், கிளிநொச்சிப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

### வழக்கறிஞர்கள்

1ம், 2ம் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. எம். பாலசுந்தரம், வழக்கறிஞர் திரு. வி. என். நவரத்தினத்தின் உதவியுடனும், திரு ஆர். டி. சிவகுருவின் அநுசரணையுடனும் 3ம், எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. வி. என். நவரத்தினம், திரு. ஆர். டி. சிவகுருவின் உதவியுடனும், 4ம், 5ம், 6ம் எதிரிகள் சார்பில் திரு. வி. செல்லத்தம்பியின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. ரி கணேசலிங்கமும் ஆஜரானார்கள்.

கணபதிப்பிள்ளை கந்தையா சாட்சியமளித்தபோது கூறியதாவது:

"சம்பவம் நடந்த அன்றிரவு நான் சில்வா வீதியால் மாடு கொண்டு போனேன். அப்போது 2ம் எதிரி நடராசாவின் வீட்டின் முன்னால் 1ம் எதிரி தனுஷ்கோடி, 4ம் எதிரி சண்முகம், 6ம் எதிரி வரப்பிரகாசம் உட்படப் பலர் குழுமியிருந்தனர். நடராசா என்னை ஒரு திருமணப் பேச்சுக்கு வருமாறு அழைத்தார். நானும் சம்மதித்து அவருடன் காரில் போனேன். எங்கள் காரின் பின்னால் வேறொரு காரும் வந்தது. அது யாருடையதென்று எனக்குத் தெரியாது. எங்கள் கார் கல்மடுச் சந்தியில் நின்றது. காரில் இருந்த சண்முகம், தனுஷ்கோடி ஆகியோர் இறங்கி நடந்துபோனார்கள். பின்னால் வந்த காரும் நின்றது. அதன் அருகில் 7ம் எதிரி கந்தையா நின்றார். நானும், பெருமைனார் அப்பையாவும் காருக்குள் இருந்தோம். கார் புறப்பட்டு ஒரு வீட்டின் முன் கேட்டில் நின்றது. அச்சமயம் காரின் முன்பக்கக் கண்ணாடியில் ஓர் அடி விழுந்தது. கார் உடனே புறப்பட்டு நேரே சென்றது. நான் எனது வீட்டில் இறங்கிக்கொண்டேன்.

### குறுக்குவிசாரணை

சாட்சியமளித்த கந்தையாவை வழக்கறிஞர் திரு. கணேசலிங்கம் குறுக்குவிசாரணைசெய்தார்.

வழ: இறந்தவரை உமக்கு எவ்வளவுகாலமகத் தெரியும்? -15 வருடங்களாக.

வழ: அவரின் மகள் பூரணத்தைத் தெரியுமா? -தெரியாது.

வழ: அவரின் வீட்டிற்குப் போயிருக்கிறீரா? -இல்லை.

வழ: 7ம் எதிரி கந்தையாவுடன் உமக்குச் சச்சரவு இருந்ததா? -இல்லை.

வழ: உம்மை அரிவாள் கந்தையா என்றும் அழைப்பார்கள்? -இல்லை.

வழ: பொலிஸாருக்கு வாக்குமூலம் எங்கு அளித்தீர்? -பொலிஸ்நிலையத்தில்.

வழ: அங்கு யார் அழைத்துச் சென்றார்கள்? -நானே சென்றேன்.

வழ: நீர் போகும்போது இன்ஸ்பெக்டர் இருந்தாரா? -இல்லை,

வழ: எவ்வளவு நேரம் பொலிஸ்நிலையத்தில் இருந்தீர்? -ஒரு மணித்தியாலம்.

வழ: ஏன்? -இன்ஸ்பெக்டர் வருமவரை அங்கு இருந்தேன்.

வழ: வேறு ஒருவரும் உமது வாக்குமூலத்தைப் பதியவில்லை? -ஆம்;

வழ: அவர்களிடம் உம்மை பொலிஸார் தேடுவதினால் வாக்குமூலம் அளிக்கவந்தேன் என்று சொன்னீரா? -இல்லை.

வழ: ஏன்? -பயத்தினால் சொல்லவில்லை.

வழ: என்ன பயம்? -பொலிஸார் அடிப்பார்களென்று பயந்தேன்.

வழ: உமக்கும் இக்கொலையில் சம்பந்தமுண்டு? -இல்லை.

சாட்சியமளித்த 5ம், 6ம் எதிரிகளின் தந்தை ஜோசப்பை வழக்காளி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் கண்ணுத்துரைவிசாரணை செய்தார்.

வழ: பொலிஸாருக்கு நீர் வாக்குமூலம் கொடுத்தீர்? -ஆம்.

வழ: அதில் நீர் கார்ச்சத்தம் கேட்டு எழும்பினேன் என்று சொன்னீரா? -ஆம்.

வழ: 2ம் எதிரி ஒரு பெண்ணுடன் நின்றாரென்றும் அவர்களுடன் குணமும் நின்றாரென்றீர்? -ஆம். இன்ஸ்பெக்டர் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் ஆம் என்றேன்.

வழ: ஏன்? -அவர் எதை நினைத்துக் கேட்கிறாரென்று எனக்குத் தெரியாது. எனவே எல்லாவற்றிற்கும் ஆம் என்று சொன்னேன்.

வழ: இன்ஸ்பெக்டர் தமிழில் தான் கேள்விகேட்டார்? -ஆம்.

(5-ம் பக்கம் பார்க்க)


REGAL — JAFFNA
NOW SHOWING
Kerwin Mathews
in
THE PIRATES
OF
BLOOD RIVER
(Eastman color)

மகத்தான ஆரம்பம்
கிங்ஸ்லி — பிளாஸா
(கொழும்பு) (வெள்ளவத்தை)
மற்றும் 4 திரைகளில்
நடிகர்திலகம்
சிவாஜிகணேசன்
கொடைவள்ளல் கர்ணனாக நடிக்கும்
பத்மினி பிக்சர்ஸ்
கர்ணன்

4-வது மகத்தான வாரம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத
பிரபல பின்னணி பாடகர்
டி. எம். சௌந்தரராஜன்
நடிக்கும்
பட்டினத்தார்
சங்கீதம்: ஜீ. ராமநாதன் — டைரக்ஷன் கே. சோமு

A Happy X' Mas
and
A Bright and Prosperous New Year
to all our Customers and Well Wishers...
SAREE EMPORIUM
124, K. K. S. Road Jaffna
Phone: 418 ::: Grams: "Sarees"

For all your Household requirements
Cake Ingredients
Pure Coffee powder, Fresh Atta Flour
Chilly and Curry Powder, Cleaned Curry Stuffs
and
Fresh Butter, Tinned Foods, Milk Foods
Country Row and Samba Rice
Glassware, Enamelware, Stationery Etc.
Call at :-
MASTER STORES
22, 24, Clock Tower Road,
(Opp. New Building—Jaffna Co-operative Stores)
Telephone : 7030
Available at moderate rates. Free delivery

NEW CHEERFUL CHARMING
Just What SHE Wanted
FOR THE NEW YEAR
RAW COTTON, JAPAN MANIPURI
SAREES
ONE TO A CUSTOMER
TOLARAMS,
Main Street, ::: Jaffna.
Tel: 7099.

## சம்பவம் நடந்த

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

1-ம், 2-ம் எதிரிகளின் வழக்கறிஞர் குருக்கு விசாரணை செய்தார்.

வழ இன்ஸ்பெக்டரிடம் நீர என்ன சொல்வீர் என்று தெரியுமா? - தெரியாது.

வழ என்ன கேள்விகள் கேட்டார் என்று தெரியுமா?- தெரியாது.

(இங்கோத்தில் நீதிபதி சாட்சியைநோக்கி பொய்ச்சாட்சி சொன்னால் மறியல் தண்டனை கிடைக்கும் என்றுசொல்லி எச்சரித்தார்.)

வழ அன்று இரவு சத்தம் ஒன்றும்கேட்கவில்லை?- இல்லை.

வழ: இப்பொழுது சொன்னது முழுவதும் உண்மை?- ஆம்.

திரு கணேசலிங்கம் குருக்கு விசாரணை செய்தார்.

வழ: கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் தேவசகாயம் உமக்கு அடித்தார்?-ஆம்,

வழ: அப்போது உமது மனைவியும் இருந்தார்?-ஆம்.

வழ: அவருக்கும் அடித்தார்?- இல்லை.

வழ பயமுறுத்தினரா?- ஆம்.

வழ எப்படிப் பயமுறுத்தினர்?- மறியலுக்கு அனுப்புவேன என்று.

வழ அதனால் நீர் பயந்து அவர் கேட்ட எல்லாக்கேள்விகளுக்கும் ஆம்என்று பதிலளித்தீர்?-ஆம்.

தொடர்ந்து கிராமசேவகர் இராஜசேகரவேலுவும், முதலாம் எதிரியின் துணிகளைச் சுத்தம் செய்யும் கந்தனும் சாட்சியமளித்தனர்.

மேல்விசாரணை இம்மாதம் 29-ம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

நியூயோர்க் டிச. 25

கிறிஸ்மஸுக்காக ஒத்தி வைக்கப்பட்ட ஐ. நா. சபை வருகிற செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பமாகும்.

இதற்கிடையில் ஐ. நா. சமாதானப்படைக்கு தாமாக முன்வந்து பணம் செலுத்தும் திட்டத்தை ரஷ்யா சிரசகித்திருக்கிறது.

# சைவமும் தமிழும் இரு கண்கள்

## முன்னைநாள் உடுப்பிட்டி எம். பி. பேச்சு

உடுப்பிட்டி, வெள்ளி

"சைவமும் தமிழும் நமது இரு கண்கள். அன்பு நெறிகளைக் கடைப்பிடிக்கு அற வாழ்க்கைக்கு ஏதுவாகவுள்ளது சைவசமயம். சமாதானமும் அன்பும் ஏற்படுவதற்கு சமயம்வழிகோலும். இவற்றை யுணர்ந்தே நம காட்டில சமயத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள்.

சைவம் விஞ்ஞானத்திற்கும் அப்பாற்பட்டது. உதாரணமாக மணிவாசகப் பெருமான் - திருப்புகழ் தந்த அருணகிரிநாதர் போன்ற உண்மை ஞானிகள் தமது ஞான திருஷ்டியினால் விஞ்ஞானத்திற்கும் எட்டாத பேருண்மைகளை உலகத்தாருக்குத் தங்கள் பாடல்கள் மூலம் விட்டுச்சென்றுள்ளனர். இப்பாடல்களை நாம் பாராயணம் பண்ணுவதோடு நில்லாது அவற்றுள் பொதிந்து கிடக்கும் உண்மைகளையும் உணரவேண்டும்."

இவ்வாறு உடுப்பிட்டி முன்னாள் எம் பி திரு. மு. சிவசிதம்பரம் கரவெட்டி அத்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில் திருவாதிரைத் தினத்தன்று நடைபெற்ற சமயச் சொற்பொழிவுக்குத் தலைமை வகித்துப்பேசுகையில் கூறினார்.

கோப்பாய மகளிர் ஆசிரியப்பயிற்சிக் கல்லூரிப்பேராசிரியை திருமதி சிவசங்கரம் "திருவெம்பாவையும் மணிவாசகப் பெருமானும்" என்னும் விஷயம்பற்றி பேசுகையில், வான்கலந்த மாணிக்கவாசகளின் தேன் கலந்த திருவாசகம் இரும்பை யொத்த மனங்களைக்கூடக் கசியப் பண்ணி இனிக்கவைக்கும் தன்மையது என்றார்.

கோவிலுக்கு ஒழுங்காகச் சென்று சுவாமி தரிசனஞ் செய்து கூட்டுப்பிரார்த்தனையில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு திரு சிவசிதம்பரம் பரிசில்கள் வழங்கினர். மேற்படி கோவில் நிர்வாக சபைச்செயலாளர் அனைவருக்கும் நன்றி கூறினர்.

---

## மண் அள்ளியவர் பெற்ற தண்டனை

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம் திருவடிநிலைக் கடற்கரையோரத்தில் களவாக மணல் அள்ளும் பதினைந்து இரட்டை மாட்டு வண்டி கோஷ்டியினர் மணல் அள்ளும் போது இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டனர். இராணுவத்தினரைக் கண்டதும் ஏற்றிய மண்ணையும் அப்படியே விட்டுவிட்டு அவர்கள் ஓட்டமெடுத்ததாகக் கூறப்படுகிறது. இராணுவத்தினர் எல்லா வண்டிக்காரர்களையும் கலைத்துப்பிடித்து முன் இருந்தவாறு கடற்கரையில் மணலை பரவச் செய்தனர் என்றும் பதினைந்து வண்டிக்காரர்கள மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

---

## வலி வடக்கில் சேதம்

கல்லூர், வியாழன்

செவ்வாய்க் கிழமையிரவு வீசிய கடும் புயற்காற்று காரணமாக வலிகாமம் வடக்கு காரியாதிகாரி பிரிவில் சுமார் 2 லட்சம் ரூபாவுக்கு அதிகமான சேதமேற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏழாலை, புன்னாலைக் கட்டுவன், பலாலி கட்டுவன் முதலிய இடங்களில் ஏராளமான வாழைத் தோட்டங்களும், கொல்லங்கலட்டி, பன்னாலை, மாவிட்டபுரம் ஆகிய இடங்களின் வெற்றிலைத் தோட்டங்களும் இணுவில், சங்குவேலி, சுன்னாகம் ஆகிய இடங்களில் காய்கறித் தோட்டங்களும் பெருமளவில் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

ஏழாலையிலுள்ள ஓர் கல்வீட்டின் மீது அடுத்தடுத்து மூன்று பனைகள் வீழ்ந்ததால வீடு பெரிதும் சேதமுற்றுள்ளது. வீட்டிலுள்ளவர்கள் சிறுகாயங்களுடன் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்,

காங்கேசன்துறை சுங்க இலாகாக் கட்டிடத்தின் ஓர் பகுதி காற்றினால் பெரிதும் சேதமடைந்துள்ளது. கீரிமலை பருத்தித்துறை வீதியில் பஸ்ஸின் சில்லொன்று புதையுண்டுள்ளது. வழியில்தென்னைமரம் ஒன்று விழுந்ததால் கீரிமலையில் இருந்து வந்துகொண்டிருந்த பஸ் திரும்பும்போது சில்லு மண்ணில் புதைந்தது. பொதுமக்கள் பலர் கூடி பஸ் வண்டியை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டனர்.

---

## ஸொறி மோதி ஸ்தலத்தில் மரணம்

சாவகச்சேரி, வெள்ளி

இன்று காலை ஒன்பது மணியளவில் கைதடி ஆன்பத்

---

**COLLEGE OF HIGHER STUDIES**

Anaipanthy—Jaffna

Classes in Building construction Draughtsmanship including Drawing plans sections and elevations to scale taking out Quantities and framing Estimates with data for labour and materials commence on the 6 th January 1965

1196 Apply Registrar

---

## KALAIVANI ELECTRICAL UNDERTAKINGS

Evening and Week - end Classes with practical training during day time.

Electrical Wiring, Local Govte Service Electrical Foreman's Examination

Electrical Engineering practice, City and Guilds London-Preliminary, Intermediate and Final.

A M I E E Part II for Physics Graduates. Graduateship Examination of the Institution of Electronic and Radio Engineers, London

Ancillary Classes in Mathematics Physics and Engineering Drawing.

Classes will commence on 18th January 1965. Applications stating present qualification should be sent to the secretary on or before 15th January 1965.

Secretary

Kalaivani Electrical Undertakings.

K. K. S. Road,

Mallakam

1240

---

**Tuition**

Effective Tuition in Pure & Applied Maths physics Chemistry Botany & Zoology for G. C. E. (O L) in Chundikuli Area Homes Visited. Apply to: R, K. Sarma 84 Colombuthurai Road, Jaffna

1358

---

## புயலினால் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கிறார்கள், கொழும்பிலுள்ள சௌக்கியதான தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர்கள் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

## ரயில் அடித்து செல்லப்பட்டது

இந்தியாவில் தனுஷ்கோடியிலிருந்து இராமேஸ்வரத்திற்குச் சென்றுகொண்டிருந்த பிரயாணிகள் ரயில கடல் கொந்தளிப்பினால் அடித்துச் செல்லப்பட்டதாய் அறிவிக்கப்பட்டது.

---

திரிக்கு முன்னால், கைதடிவாசி வேலன் என்பவர் லொறியினால் மோதுண்டு ஸ்தலத்திலேயே மரணமானார்.

இவர் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும் போது இவ்விபத்து நடைபெற்றது. பக்கத்தில் நின்றவர்கள் ஆரம்ப சிகிச்சை செய்ய முயன்றும் அவர் இறந்தபடியால் முயற்சியைக் கைவிட்டனர்.

---

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள நெசவு நிலையத்திற்கு நெசவில் தேர்ச்சிபெற்றவர்களும், நெசவில் பயிற்சி பெற விரும்புவோர்களும் (பெண்மணிகள் மட்டும்) தேவை. உடன் நேரில் விண்ணப்பிக்கவும் உணவு, தங்குமிட வசதிகள் அளிக்கப்படும்

சைலாசபிள்ளையார் நெசவுத் தொழிற்சாலை, 327, நாவலர் வீதி (வைமன் ரேட் சந்தி) 1352

---

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தம் கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

### புதிய இந்துசமய நூல்

(இரண்டாம் பதிப்பு)

1965-1966-ம் ஆண்டு G C E. சைவசமயபாட பரீட்சைக்குரிய பாடத்திட்டம் முழுவதும் அடங்கியது.

ஆக்கியோன் - சபாரத்தினம்

வெளியிடுபவர்:- சி. மங்கலநாயகம் வட்டுக்கோட்டை.

அச்சுப்பதிவு:- சண்முகநாதன் அச்சகம்.

மொத்தவிற்பனையாளர்கள்:- கலைலக்குமி புத்தகசாலை- சுன்னாகம்.

கலைவாணி புத்தகசாலை - கண்டி & மட்டக்களப்பு.

விலை ரூபா: 2-50

1360

---

### தேவை

சில்லறைக் கடையை நிர்வகிக்க திறமைசாலி ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும் யாழ்ரன்ஸ் - ஹொரனை. 1359

---

### கல்வி

பெண்களுக்கு மட்டும். தட்டெழுத்து சுருக்கெழுத்து ஆங்கிலத்தில், தமிழில். சிங்களம், கணக்கு பதிவியல் ஆங்கிலம். ஜி. சி. இ. சாதாரணம், மேல்தரம் கலை, விஞ்ஞானம், வர்த்தகம், தையல். தினசரி காலை மாலை வகுப்புகள். எல்லாப் பாடங்களும் ஒரே இடத்தில் இரு மொழிகளிலும் பயிற்றப்படும். யாழ் கல்லூரி, 29, பருத்தித்துறைரோட்டு. யாழ்ப்பாணம். 1350

---

### தேவை

எமது தொழிற்சாலையில் கடமையாற்றுவதற்கு ஒரு ஒரு 'சேல்ஸமன்' தேவை. விண்ணப்பிக்கவும், குமர் இண்டஸ்ரீஸ், 133, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம். 1361

---

### போறணை விற்பனவு

தெல்லிப்பழை சிகரெட் புகையிலை ஐக்கிய சங்கத்தின் (மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதியில்) போறணைகள் இரண்டும் ஒன்றொட்டிலொன்றும் 31-12-64 காலை பத்து மணியளவில் ஏலத்தில் விற்கப்படும். மேற்படி சங்கத்தில் முப்பதினாயிரம் சிகரெட் புகையிலை காற்றுகள் உடனடியாக விற்பனைக்குண்டு. நா. தம்பு, தலைவர். 1362

---


## ஈழத்தமிழ் ஒற்றுமை முன்னணி

ஈழம் : எங்கள் தெய்வம்

ஈழப்போர் : எங்கள் தர்மம்

ஈழவெற்றி : எங்கள் சுவாதீனம்.

ஈழத்தமிழ் இனமே! எங்கள் கதி என்ன?

1965 பொதுத் தேர்தல் கூட்டங்கள்

பிற்பகல் 5-8 க்கு மிடையில் கீழ்க்காணும் திகதிகளில் நடைபெறும்.

| திகதி | இடம் |
|---|---|
| 28-12-64 | மல்லாகம் நகரசபை மண்டபம், |
| 30-12-64 | கிளிநொச்சி-கரடிப்போக்குச் சந்தி. |
| 31-12-64 | யாழ்ப்பாணம் நகரசபை மண்டபம். |
| 1-1-65 | காங்கேசன்துறை-மாவிட்டபுரம் சந்தி. |

ஈழத் தமிழ் இனத்தவர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

செ. சுந்தரலிங்கம், தலைவர்.

செ. சரவணமுத்து, செயலாளர்



BAYER

புகையிலை—வெங்காயம்—மிளகாய்—கத்தரி—தக்காளி—முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்

அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு

## மெற்றசிஸ்ரொக்ஸ் உடன்--டிப்ரெறெக்ஸ்

METASYSTOX DIPTEREX

கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத்தொடங்கவும்

PHONE 397 JAFFNA **ROYAL DISPENSARY** T' GRAMS ROYAEL

# கணேசையர் தமிழ்ச்சங்கத்தின் நான்காவது தமிழ் விழா

யாழ்ப்பாணம், சனி

மாவிட்டபுரம் கணேசையர் தமிழ்ச் சங்கத்தின் நான்காவது தமிழ்விழா இன்று சனிக்கிழமை மாவிட்டபுரத்தில் நடைபெறவிருக்கிறது. மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மேற்கு வீதியில் அமைக்கப்படும் நவநீத கிருஷ்ணபாரதி அரங்கில் தமிழ்விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி நடைபெறும்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் தலைமையில் விழா நடைபெறும். நாதசுர கானகலாநிதி என். கே. பத்மநாதன் குழுவினரின் நாதசுர இன்னிசையைத் தொடர்ந்து சங்கத் தலைவர் வரவேற்புரை நிகழ்த்துவார். முத்தமிழ் மணி சி. எஸ். எஸ். மணிபாகவதர் தொடக்கவுரை நிகழ்த்துவார். பாமாலை நிகழ்ச்சியில் பண்டிதர் க. சச்சிதானந்தன் கலந்துகொள்வார். கணேசையர் தமிழ்ச்சங்கம் நடத்திய கட்டுரைப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ கதுரைசாமிக்குருக்கள் பரிசில்களை வழங்குவார். பின்னர் நிகழும் உரையரங்கில் புலவர்மணி ஆ. பெரியதம்பிப்பிள்ளை, சைவபூஷணம் நம. சிவப்பிரகாசம், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் உரை நிகழ்த்துவர். தமிழ்மணி எஸ். கணேசசுந்தரன் குழுவினரின் வில்லுப்பாட்டும் விழாவில் இடம்பெறும்.

கணேசையர் தமிழ்ச்சங்கம் நடத்திய கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு

1-ம் பரிசான மில்க்வைற் நீலசோப் ஸ்தாபனத்தின் வெற்றிக்கிண்ணத்தை திரு க. பரமேஸ்வரன் பெறுகிறார். 2-ம் பரிசினை செல்வி செ. மகாலக்ஷ்மி, துரை அருணன் ஆகிய இருவரும், மூன்றும் பரிசினை செல்வி க. ரஞ்சிதமாலாவும் பெறுவர்.

# பாம்பன் பாலத்துக்கு நேர்ந்த கதி!

## தூண்கள் மட்டுமே இருக்கின்றன

சென்னை, டிச. 24

கடல் கொந்தளிப்பு காரணமாக பாம்பன் ரயில் பாலம் முற்றிலும் சீர்குலைந்துவிட்டது. ரயில் பாதை, கடல் நீருடன் அள்ளப்பட்டுள்ளது. பாலத்துக்கு பதிலாக அங்கு வெறும் தூண்கள் மட்டுமே காட்சியளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### வைகை சீறுகிறது

மதுரையில் வைகைநதி பெருக்கெடுத்துள்ளது. அபாயம் தொடர்ந்திருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### 3,000 பேர் பாதிப்பு

ராமேஸ்வரம் பகுதியில் 3000 பேர் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். விமானம் மூலம் மட்டுமே அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

## சடலங்கள் மிதந்தன

யாழ்ப்பாணம், வெள்ளி

நெடுந்தீவு கிழக்கிலும் குறிகட்டுவான் பெரியடியிலும் கரையோரங்களில் சடலங்கள் மிதப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் பதினைந்து பேரின் சடலங்கள் அப்படி மிதப்பதாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர். சில சடலங்கள் மீன் கூடுகளிலும் சிக்குண்டதாக கூறப்படுகிறது

நெடுந்தீவுக்கும் ஊர்காவற்றுறைக்கு மிடையே சேவையாற்றிவந்த வள்ளமொன்று உடைந்ததால் ஜி. ஸி. ஈ. பரீட்சை விடைத்தாள்களும் மற்றும் குமாஸ்தாக்கள் பரீட்சை விடைத்தாள்களும் நீருடன் நீராகக் கலந்தன.

# 'ஈழநாடு' தினக்குறிப்பு 1965

## விற்பனையாகின்றது

**விலை ரூபா 1-50.**

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## செய்திச் சுருக்கம்

அரசாங்க பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் உட்பட சகல அரசாங்கசேவை ஊழியர்களுக்கும் உடனடியாக அரசியல் உரிமை வழங்குமாறு அரசாங்க லிகிதர் சங்கம் பிரதமந்திரிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரொன்றில் கேட்டுள்ளது.

∴ ∴ ∴

சகல இலாகாக்களிலும் ஊழல்களையும், ஒழுங்கீனங்களையும், வீண் செலவுகளையும் ஒழித்துக்கட்ட அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது. விசாரணைக்கமிட்டிகளை நியமிக்க பிரதமர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

∴ ∴ ∴

அரசாங்கம் வெளியிடும் பாடப்புத்தகங்களை விற்பனை செய்வதற்கு 400 புத்தக விற்பனை நிலையங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அடுத்தவருடத்திலிருந்து, இவை புத்தகங்களை விற்பனை செய்யும்.

∴ ∴ ∴

'இலங்கை-இந்திய ஒப்பந்தம், இலங்கையிலுள்ள லட்சக்கணக்கான இந்திய வம்சாவளி மக்களினது நலன்களுக்கும் அவர்களது மனித கௌரவத்துக்கும் இழைக்கப்பட்ட பெருந்துரோகமாகும்' என திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை ராஜ்யசபையில் தெரிவித்தார்.

∴ ∴ ∴

பெரும்பான்மையாக தமிழ் மக்கள் வசிக்கும் தலவாக்கொல்லையிலுள்ள அஞ்சல் அலுவலகத்தில் தமிழில் எழுதிக்கொடுக்கும் தந்திகளை தமிழர் ஒருவரும் இல்லையெனக் கூறி திருப்பி அனுப்பிவிடுவதாக அறியப்படுகிறது.

∴ ∴ ∴

இலங்கைப் பல்கலைக்கழக வருடாந்தப் பட்டமளிப்பு விழாவின்போது இம்முறை பட்டம்பெற்ற 1400பேர்களுள் 1060 பேர்களுக்கு கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ நேர்முகப் பட்டங்களை வழங்கினர்.

∴ ∴ ∴

அரசாங்கசேவையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு முன்னர் எதிர்பார்த்தபடி அடுத்த வருடம் ஜனவரி முதல் வாரத்தில் ஐந்து நாள் வேலைத்திட்டம் அமுலுக்கு வரமாட்டாதென அறியப்படுகின்றது.

∴ ∴ ∴

கண்டி திவ்யஜீவன சங்கத்தார் யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தாவின் ஜெயந்தியை நாளை கொண்டாடவிருக்கின்றனர்.

## இரணைதீவில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடத் தொழிலுக்குச் செல்வதற்கு வலை, கயிறு இல்லையாம்.

யாழ்ப்பாணம் மாநகரசபை அங்கத்தவர் திரு. எம். எஸ். பேரின்பநாயகத்தின் பட்கு ஒன்று அங்கு வியாழக்கிழமை காலை சென்ற பொழுது அங்கு மரத்தின்கீழ் குழந்தையொன்றைப் பிரசவித்து மயங்கிய நிலையில் கிடந்த ஒரு பெண்ணை பட்கில் சென்றவர்கள் கண்டு உடனடியாக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவந்து ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். இரத்தம் செலுத்தி சிகிச்சை அளிக்கப்பட்ட அப்பெண் இப்பொழுது குணமடைந்துவருகிறாராம். பின்னர் திரு. பேரின்பநாயகம் தமது பட்கில் உணவுப் பொட்டலங்கள் அனுப்பிவைத்தாராம்.

நேற்று கச்சேரியில் நடைபெற்ற மகாநாட்டில் இரணைதீவு மக்களின் அவலநிலை பற்றித் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக இலவச ரேஷன் அரிசி வழங்குவதெனவும் சட்டி பானைகள் வழங்குவதெனவும் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

# கோப்பாயில் குணரத்தினம் காங்கிரஸ் அபேட்சகர்

யாழ்ப்பாணம், வெள்ளி

கிழக்கு மாகாணத்தில் தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிட விண்ணப்பித்திருக்கும் அபேட்சகர்கள் பற்றி ஆராய்ந்து தகுந்த அபேட்சகர்களை தேர்ந்தெடுப்பதற்காக இம்மாதம் 29-ம் தேதி தமிழ்க் காங்கிரஸ் குழு கிழக்கு மாகாணம் செல்கின்றது.

பட்டிருப்புதொகுதியில் தமிழ் காங்கிரஸ சார்பில் போட்டியிட திரு. பிரான்சிஸ் சேவியர் திருமேனிப்பிள்ளை விண்ணப்பஞ்செய்துள்ளார். மட்டக்களப்பு தொகுதியில் தமிழ் காங்கிரஸ சார்பில் போட்டியிட இலங்கை போக்குவரத்துச்சபை ஊழியரான திரு. சோமசுந்தரம் விண்ணப்பஞ் செய்துள்ளார்.

காங்கேசன்துறையில் தமிழ்க் காங்கிரஸ சார்பில் செனட்டர் திரு. ஊ. நடேசபிள்ளையை நிறுத்த சிலர் முயற்சி எடுத்துவருவதாகவும், ஆனால் ஸ்ரீ பாஸ்கரனையே நிறுத்த வேண்டுமென்று தமிழ்க் காங்கிரஸ முக்கிய பிரமுகர்கள் வற்புறுத்திவருவதாகவும் அறியப்படுகிறது.

கோப்பாய் தொகுதியில் காங்கிரஸ சார்பில் திரு. குணரத்தினமும், நல்லூர் தொகுதியில் காங்கிரஸ சார்பில் திரு. சி. அருணாசலமும் நிச்சயமாக போட்டியிடுவார்களென தமிழ் காங்கிரஸ பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் திரு. ஜி ஜி பொன்னம்பலமும், உடுப்பிட்டியில் திரு. எம். சிவசிதம்பரமும், கிளிநொச்சியில் திரு ஏ. சிவசுந்தரமும், சாவகச்சேரியில் திரு. எம். சிவானந்தமும், நிச்சயமாக தமிழ் காங்கிரஸ அபேட்சகர்களாக போட்டியிடுவார்களென்றும், இத்தொகுதிகளில் தமிழ் காங்கிரஸ் சார்பில் வேறு எவரும் விண்ணப்பஞ்செய்யவில்லையென்றும் தமிழ் காங்கிரஸ் பிரமுகர் தெரிவித்தார்.

மற்றும் தொகுதிகளில் தமிழ் காங்கிரஸ சார்பில் போட்டியிடப்பலர் விண்ணப்பஞ்செய்துள்ளதாகவும், தமிழ் காங்கிரஸ் பொது நிர்வாக சபை இவ்விண்ணப்பங்கள்பற்றி பரிசீலனை செய்து வருவதாகவும், இறுதி முடிவு உத்தியோகபூர்வமாக இம்மாத இறுதியில் தெரிவிக்கப்படுமென்று தெரிகிறது.

## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர் பகுதி

### கல்வி பொதுத் தராதர 'உயர்நிலைப்'பரீட்சை வகுப்புகள்

1965-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடாத்தப்பெறும் கல்விப் பொதுத்தராதர 'உயர்நிலை' பரீட்சைக்குரிய இரண்டாம் ஆண்டு மாணவர் வகுப்புகளும், விசேட ஒரு வருட வகுப்புகளும், கலைபகுதி விஞ்ஞானப்பகுதி இரண்டிலும் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகும்.

மேற்படி வகுப்புகளில் சேர விரும்புவோர் விலாசமிட்டு முத்திரை ஒட்டிய 'நீண்ட கவரை' அனுப்பி மனுப்பத்திரபடிவமும் கல்லூரி விபரப் பிரகடனமும் பெற்றுக்கொள்ளலாம்.

2-1-1965க்குப்பிந்தாமல்மனுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1966-ம் ஆண்டில் நடாத்தப்பெறும் மேற்படி பரீட்சைக்குரிய வகுப்புகள் 1965-ம் ஆண்டு மே மாதம் ஆரம்பமாகும்.

பதிவாளர்,

வட்டுக்கோட்டை, 1229

## வவுனியாவில் . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நாகலிங்கம் கேட்டுக்கொண்டார். இதுபற்றிக் காரியாதிகாரியுடன் ஆலோசித்து முடிவுசெய்வதாக அவர்கள் அறிவித்தார்கள்.

புயலில் சிக்கியவர்களுக்கு உடனடியாக உதவியளிப்பது சம்பந்தமாகத் திரு. நாகலிங்கம் சமூகசேவை இலாகா உதவி மந்திரி செனட்டர் சந்திரா குணசேகராவுடன் தொடர்புகொண்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

இப்புயலினால் கோப்பாய்த் தொகுதியிலும், உடுவில் தொகுதியிலும் சுமார் 5000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் வவுனியாப்பகுதியில் வீசிய கடும் புயல் மக்களுக்கும், வீடுகட்கும், பயிர்களுக்கும், உயிரினங்களுக்கும் ஏற்பட்டுள்ள மாபெரும் நஷ்டத்திற்கு நிவாரணம் அளிக்கும்வண்ணம் வவுனியா நகரசபை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வேண்டிய நன்கொடை தந்துதவும்படி உடனடியாக சமூக சேவைப்பகுதியினரைக்கேட்டுக்கொள்வது என்று மேற்படி சபை தீர்மானித்துள்ளது.

சமீபத்தில் வீசிய புயலால் வவுனியா நகரசபை எல்லைக்குள் இருக்கும் நகரசபைக்குரிய தெருக்களும், கட்டிடங்களும், மின்சார இணைப்புகளும் பெரும் சேதம் அடைந்தது பாவிக்கமுடியாத நிலைமையில் இவற்றை உடனடியாகத் திருத்தியமைத்துபோக்குவரத்துக்கு வேண்டிய வசதிகளைச்செய்து தந்துவேண்டியபணவுதவிதரும்படி உள்ளூராட்சி ஆணையாளரையும் மந்திரியையும் கேட்பதென்று சபை தீர்மானித்தது

### சாவகச்சேரி

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள், 10-ம் வட்டாரமாகிய மீசாலை தெற்கில் வசிக்கும் ஐம்பதிற்கு மேற்பட்ட கடற்தொழிலாளர்களின் கன்டிக்கூடுகளையும், கொய்மீன்கூடுகளையும் கைவலை வலைகளையும் புயல்காற்று அடித்துச் சென்றுவிட்டது. இதனால் இவர்களின் குடும்பங்கள் மிக கஷ்டத்திற்குள்ளாகிவிட்டது.

இத்தொழிலாளர்கள் 10-ம் வட்டார அங்கத்தவர் திரு. க. கனகரத்தினம் மூலம் நஷ்டஈடு கோரி தென்மராட்சி காரியதிகாரிக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

## மேலும் இருவர் வவுனியாவில் பலி

வவுனியா, வெள்ளி

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கொக்குவெளி கிராமத்தில் மேலும் இருவர் மரணமடைந்துள்ளதாக கடைசியாகக் கிடைத்த செய்தி மூலம் அறியப்படுகிறது.

வவுனியா மாவட்டத்தில் புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சகல காரியாதிகாரிகளின் பிரிவிலும் கிராமாதிகாரிகளின் மூலம் 2 படி அரிசி, அரை றாத்தல் சீனி 2 அவுன்ஸ் பருப்பு வீதம் விநியோகிக்கப்பட்டுவருகின்றது. வவுனியாவில் பெருந்தொகையான பணச் செலவில் அமைக்கப்பட்ட தேக்கஞ்சோலை முற்றாக அழிந்துவிட்டது.

வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், விற்பனை இலாகா உணவுக் களஞ்சியமும், சேதமடைந்ததினால் மக்கள் உணவிற்காக பெரும் கஷ்டமடைந்துள்ளனர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க